**தலைப்பு 239 - வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு – 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 12 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,007.85 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 874.82 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2,133.03 மில்லியன் அதாவது 70.92 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 333.24 | 196.97 | 136.27 | 40.89 |
| மூலதனம் | 2,674.61 | 677.85 | 1,996.76 | 74.66 |
| மொத்தம் | 3,007.85 | 874.82 | 2,133.03 | 70.92 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 23901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.50 | 4.49 | 2.50 | 3.72 | 27.00 | 16.88 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அரிசி உதவி வழங்குவதற்காக ரூபா 2,000.00 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், நாட்டில் காணப்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் உதவிகளை வழங்க முடியாதிருந்தது. இதன் பிரகாரம் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 99 சதவீதமாக இருந்தது.

**3.2 செயலாற்றல்**

2015 ஆண்டின் போது 3,658 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் கடன் மற்றும் மானியங்களாக பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும், 1,333.6 ஐக்கிய அமெரிக்க டொலர் மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு ஒப்பாக 36 சதவீதமாக இருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டில் சீன அரசாங்கத்தின் மூலம் நிதி வசதிகள் எதிர்பார்க்கப்பட்ட 08 செயற்திட்டங்களுக்கும் தென் ஆசியாவிலிருந்து நிதி வசதிகள் எதிர்பார்க்கப்பட்ட 06 செயற்திட்டங்களில் 05 இற்கும் நிதி வசதிகள் கிடைக்கப்பெறவில்லை.

**3.3. முகாமைத்துவ பலவீனங்கள்**

**3.3.1 வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பங்கள்**

வெளிநாட்டு பயிற்சியளித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு கிடைத்த 90 பயிற்சி பாடநெறிகளுக்காக விண்ணப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டிருந்தன. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது இருக்க வேண்டிய கல்வித் தகைமைகள், வயதெல்லை மற்றும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி போன்ற விபரங்கள் பரிசோதனைக்குட்படுத்திய தெரிவுக் கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து / நிறுவனங்களிலிருந்து கிடைத்த 85 பயிற்சி பாடநெறிகளின் விண்ணப்பங்கள் கிடைக்காததன் பேரில் இலங்கைக்கு கிடைக்காமல் போயிருந்ததாக திணைக்களத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பகுப்பாய்வின் போது தெளிவாகியது.

**3.3.2 வெளிநாட்டு உதவி பரிசோதனைகள்**

வெளிநாட்டு உதவி பெறுவனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014001 ஆம் கடன் இலக்கம் மற்றும் 2014034 (Improvement of Rehabilitation of Priority Roads Projects3) என்ற செயற்திட்டத்திற்காக முறையே 300 மில்லியன் ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் மற்றும் 100 மில்லியன் ஐ.அ.டொ என 2 கட்டங்களின் கீழ் மொத்தக் கடன் தொகை சீன அபிவிருத்தி வங்கியால் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. II ஆம் கட்டத்தின் கீழான கடன் தொகையில் முதலாம் கட்டத்திற்குரிய மொத்தப் பணத்தையும் பயன்படுத்தியதன் பின்னரும் உடன்படிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு II ஆம் கட்டத்திற்குரிய கடன்தொகைக்கு வட்டியாக ரூபா 121,452,142 தொகையும் ஏனைய கொடுப்பனவாக ரூபா 401,600,000 தொகையும், கடன் பணத்தைப் பயன்படுத்தப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறைந்த கிரயத்தில் குறைந்த நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு உதவி பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 2014037 ஆம் கடன் இலக்கத்தின் கீழ் (Green Power Devolopment & Energy Efficiency Impronement) என்ற செயற்திட்ட ஒப்பந்தம் 2015 பெப்ரவரி 02 ஆந் திகதி செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அத்திகதி முதல் உடன்படிக்கையின் பிரகாரம்

கடப்பாட்டுக் கட்டணங்களாக 2015 ஆம் ஆண்டில் ரூபா 22,845,863 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக கடன் விடுவிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) 2012032 ஆம் கடன் இலக்கத்தின் (Hambantota Port Development Project Phase ii) கீழான உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டிய முகாமைத்துவ கட்டணங்களும் உடன்படிக்கைப் பிரகாரம் செலுத்த வேண்டிய ரூபா 106,104,500 கடப்பாட்டுக் கட்டணங்களும் இலங்கை மஹவெலி அபிவிருத்தி அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014023 ஆம் இலக்க கடனின் (Digitalization of Terrestroal Television Broadcasting Project) கீழ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உடன்படிக்கை பிரகாரம் Fornt end Fee என 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 29,768,633 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையை செயற்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப முறைமை தொடர்பான ஆய்வின் குழு அறிக்கை வழங்கப்படும் வரை செயற்திட்டம் தாமதமாக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது கடன் உடன்படிக்கைளில் கைச்சாத்திட்டிருந்த போதிலும் காணி கையேற்றல் மற்றும் வரிசை அமைச்சிற்குரிய தாமங்களினால் 2016 செப்தம்பர் மாதம் வரையிலும் அக்கடனைப் பயன்படுத்துவதற்கு முடியவில்லை. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் வெளிநாட்டுக் கடன்/மானியங்கள் மூலம் நிதியளிக்கப்படும் செயற்திட்டங்களின் அமுலாக்கலை ஆராய்ந்து பார்த்து உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் பொறுப்பிற்கு உட்பட்டிருந்தது.

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

-----------------------------------------------

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

-----------------------------------------------------------------------------------------------

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 54 | 43 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 01 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 62 | 35 | 27 |
| (iv) | ஆரம்ப நிலை | 29 | 25 | 04 |
| | மொத்தம் | 150 | 104 | 46 |